**OPEN ACCESS**

Manuscript ID: TAM-10022025-9808

Volume: 10

Issue: 2

Month: October

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 06.09.2025

Accepted: 25.09.2025

Published: 01.10.2025

Citation:
Murugesa Pandian, N. (2025). Rules and Exceptions in Ancient Tamil Literature. *Shanlax International Journal of Tamil Research, 10*(2), 1-8.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i2.9808

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Rules and Exceptions in Ancient Tamil Literature

**N. Murugesa Pandian**

*http://orcid.org/0000-0002-1831-7730*

**Abstract**

*During the Sangam period, when tribal life was in decline, the Vedic religion introduced upper&lower distinctions based on the four castes. The Vedic religion, which emphasizes on the basis of law or dharma that there should be no mixing of castes, also emphasizes purity, impurity, and exclusion. When land became the property of men, women also became the property of men. The socio&economic and political conditions of that day, combined with sexual politics, created new rules for women. Tolkappiyar has recorded the fact that women's status in a property&owning society has become a matter of law.*

***Keywords:*** *Criticism, Sangam literature, Tolkappiyam, Thirukkural, Purananuru, Manu Dharma, Vedic Sanathanam, Four Varna Theory, Rules, Exemptions*

**References**

1. Manu Dharmam, Tamilnadan (Tr). Kaavya Publishing House, 2011.
2. Raj Gauthaman. Tamil Samuagathil Aamum Aaralum. Coimbatore: Vidiya Publishing House, 2008.

# பழந்தமிழ் இலக்கியத்தில் விதிகளும் விலக்குகளும்

ந. முருகேசபாண்டியன்

***ஆய்வுச் சுருக்கம்***

*இனக்குழு வாழ்க்கை சிதைவடைந்து கொண்டிருந்த சங்க காலகட்டத்திலே வைதிக சமயம், நால் வருணப் பாகுபாட்டின் அடிப்படையில் மேல்-கீழ் வேறுஅறிமுகப்படுத்தியது. வருணக் கலப்புக் கூடவே கூடாது என்பதை விதி அல்லது தருமத்தின்பேரில் வலியுறுத்தும் வைதிக சமயம் தூய்மை, தீட்டு, விலக்கு போன்றவற்றையும் முன்னிலைப்படுத்துகின்றது. எந்தவொரு சூழலிலும் தன்னை மேன்மையான இடத்தில் வைத்துக் கொள்ள முயலும் பார்ப்பனியம், புரோகிதம் என்ற பெயரில் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகள், பரிகாரச் சடங்குகள்மூலம் பல்வேறு விதிகளை விதித்துள்ளது. ஆணின் உடைமையாக நிலம் மாற்றப்பட்டபோது, பெண்ணும் ஆணின் உடைமையாக மாற்றப்பட்டாள். அன்றைய சமூகப் பொருளாதார அரசியல் நிலைமைகள், பாலியல் அரசியலுடன் இணைந்து பெண் பற்றிய புதிய விதிகளை வகுத்தன. சொத்துடைமை சமூகத்தில் பெண்ணின் நிலை இரண்டாமிடம் பெற்றதை விதிகளாக்கித் தொல்காப்பியர் பதிவாக்கியுள்ளார்.*

***முக்கியச் சொற்கள்:*** *திறனாய்வு, சங்க இலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு, மநு தருமம், வைதிக சநாதானம், நான்கு வருணக் கோட்பாடு, விதிகள், விலக்குகள்.*

பண்டைத் தமிழரின் வாழ்க்கை நெறிகள் நல்லது-கெட்டது என்ற முரணில் சமூகரீதியாகத் தகவமைக்கப்பட்டுள்ளன. அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஒருநிலையில் அறங்கள் எனப்பட்டன. அறம் என்பது எல்லோருக்கும் பொதுவானது என்ற வரையறை, மேலோட்டமான நிலையில் பொதுப்புத்தியில் அழுத்தமாக வினையாற்றுகின்றது. நடப்பில் நிலவுகின்ற ஆதிக்க உறவுகளை அறங்கள் ஒருவகையில் நியாயப்படுத்துகின்றன. ஆதிக்க சக்திகள் அல்லது ஆள்வோரின் நலன்களே ஒட்டுமொத்தச் சமூகத்தினருக்கானது என்ற புனைவைக் கட்டமைக்க அறங்கள் உதவுகின்றன. அறம் என்பது புனிதமானது: என்றும் மாறாதது; காலந்தோறும் தொடர்ந்து வருவது; ஒருபோதும் மாற்ற இயலாதது போன்ற கூற்றுகளின் மூலம் நிலவும் சமூகச்சூழல் தக்க வைக்கப்படுகின்றது. இதனால் அதிகாரம், நுட்பமான முறையில் செயல் படுகின்றது. அறம் வெல்லும் என்று உருவாக்கப்படும் கருத்தியல், போலியான நம்பிக்கையை எங்கும் விதைக்கின்றது. நடப்புச் சூழலுடன் மாறுபட்டு எதிர்த்துக் கேள்விகள் கேட்கின்றவர்களுக்குக் குற்ற உணர்வை அறம் ஏற்படுத்துகின்றது. அறம் என்பது சார்பு எதுவுமற்றது என்ற வாதம் நுண்ணரசியல் பின்புலமுடையது, சமூகத்தில் பொருளியல்ரீதியில் ஆதிக்கம் செலுத்துகின்ற குழுவினரின் நலனுக்குச் சார்பான அறத்தை வலியுறுத்திட விதிகளும் விலக்குகளும் பெரிதும் பயன்படுகின்றன.

அறம் வெல்லும் மறம் வீழும் என்பது வெறுமனே நம்பிக்கை அடிப்படையிலானது. விதி என்பது விதிக்கப்பட்டது என்ற வைதிக சமயக் கருத்தியல் பிறப்பு, பால்ரீதியிலான பேதங்களை நியாயப்படுத்துகின்றது. விதியின் விளையாட்டு, விதியின் கைப்பாவை, விதியை வெல்ல முடியுமா?

தலைவிதியை மாற்ற முடியுமா? போன்ற சொல்லாடல்கள் மூலம் மதங்கள், நிலவும் சமூகச் சூழல் குறித்து விமர்சனமற்ற பார்வையை வலியுறுத்துகின்றன. தலைவிதித் தத்துவம் இன்றளவும் செல்வாக்குப் பெற்றிருப்பது கவனத்திற்குரியது. அதிகாரத்துடன் ஆள்கின்றவர்களின் நலனைக் காக்கும் செயலை, அறம் என்ற பெயரில் விதிகள் காலந்தோறும் கட்டிக் காத்து வருகின்றன. விதி என ஒன்றை வலியுறுத்தும்போது, தானாகவே விலக்கும் ஆளுகை செலுத்துகின்றது. எவற்றைக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும் என விதிகளை வகுக்கும்போது, எவற்றை விலக்க வேண்டும் என்பதும் உள்ளடங்கியுள்ளது.

கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட வைதிக சமயமும் அவைதிக சமயங்களான ஜைனமும் பௌத்தமும் சங்க காலத்தில் தமிழக நிலப்பரப்பில் நுழைந்தன. வேட்டைச் சமூகமும் இனக்குழு வாழ்க்கையும் சிதைவடைந்து பெரு நிலப்பரப்பில் வேந்தனின் ஆட்சியதிகாரம் பரவலாகிய சூழலில், இருவகை சமய மரபுகளும் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றன. வேள்வித் தீயை வளர்த்து யாகம் செய்த சம்ஸ்கிருதம் பேசும் பார்ப்பனர்களுக்கு மன்னர்களிடம் வரவேற்பு இருந்தது. புதிதாக உருவாகியிருந்த வணிகர்கள் ஜைன, பௌத்தத் துறவியரின் கருத்துகளை ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டனர். இனக்குழுத் தலைவர்களுக்கும் பாணர்களுக்குமான உறவு சிதைவடைந்து இருந்தது. மன்னர், வேந்தர் என ஆட்சியதிகாரத்தில் ஆளுகை செய்தவர்கள் புதிய வகைப்பட்ட வைதிக சடங்குகளுக்கு முக்கியத்துவம் தந்தனர். வேந்தனின் ஆட்சியில் பாணரின் இடத்தினைப் பார்ப்பனர்கள் கைப்பற்றினர். பாணர், பறையர், பொருநர். துடியர் போன்ற கலைஞர்கள் பரந்த நிலப்பரப்பினை ஆண்ட வேந்தனின் ஆட்சிக்குத் தேவையற்றவர்களாயினர். புலையர் புலத்தி, இழிசினர் போன்ற பழங்குடியினர் இழிபிறப்பாளராகக் கருதப்பட்டனர். மக்களில் ஒரு பிரிவினரை இழிந்தவர்களாகக் கருதும் நிலை ஏற்பட்டதற்குக் காரணம் ஆளுவோரால் உருவாக்கப்பட்ட விதிகள்தான்.

பார்ப்பனர்களின் பழக்கவழக்கம், பண்பாட்டுக் கட்டமைப்பிலான சாதிய அமைப்பு சங்க காலத்தில் தமிழகத்தில் மெல்ல ஊடுருவின. வேதமும் யாகமும் பார்ப்பனர்களின் ஆயுதங்களாக உருமாறின. தருமம் அல்லது விதிகள் என்ற பெயரில் எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டது. வைதிக நோக்கில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட சடங்குகள் பரவலாயின. நால் வருணக் கோட்பாடு பெரிய அளவில் முக்கியத்துவம் பெறவில்லை. எனினும் யாகத்தின் மூலம் தீயினை வளர்த்துப் பார்ப்பனர்கள் செய்யும் சடங்குகள் புனிதமானவை என்ற நம்பிக்கை உருவாக்கப்பட்டது. பார்ப்பனருக்குக் கேடு செய்வது மாபெரும் பாவம் என்ற புனைவு மன்னர், புலவரிடையே பரவலானது. சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ள பார்ப்பனர் பற்றிய கருத்துகள் புதிய விதிகளை உருவாக்கின. வைதிகக் கடவுள்கள், புராணங்கள், சம்ஸ்கிருதச் சொற்களுடன் இனக்குழு வாழ்க்கைக்கு முரணான நிலையாமை பற்றிய கருத்துகள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. நெட்டிமையாரின் பாடல்:

**"ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்,**
**எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண்**
**சேர்மின்" என (புறநானூறு. 9)**

பசுக்கள், பார்ப்பனர்கள், பெண்கள், நோயாளிகள், புதல்வரைப் பெறாதவர்கள் போன்றோருக்குத் தீங்கிழைக்காத அற

வழிப்பட்ட போர் செய்ய வேண்டும் என்பது இப்பாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கருத்தியல்ரீதியில் சமூக மேலாதிக்கம் செய்யும் பார்ப்பனர்கள் போற்றிக் காக்கப்பட வேண்டியவர்கள் என்பது பாடல் முன்னிறுத்தும் விதியாகும்.

பசுவைக் கொல்லுதல், பெண்ணின் கருவைச் சிதைத்தல், பார்ப்பனரைக் கொல்லுதல் போன்ற பாவங்களைச் செய்தவருக்கும் பிராயச்சித்தம் உண்டு, செய்நன்றி கொன்றவர்களுக்கு மன்னிப்பு இல்லை என்ற புறப்பாடல்(34) பார்ப்பனரின் இடத்தினைச் சமூகரீதியில் வரையறுத்துள்ளது. பார்ப்பனரைக் கொல்லுதல் கூடாது என்பது விதியாகச் சொல்லப்பட்டுள்ளது.

**கார் எதிர் உருமின் உரறிக், கல்லென,**
**ஆருயிர்க்கு அலமரும் ஆராக் கூற்றம்!**
**நின்வரவு அஞ்சலன் மாதோ; நன்பல**
**கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்க்கு,**
**அருங்கலம் நீரொடு சிதறிப், பெருந்தகைத்**
**தாயின்நன்று பலர்க்கு ஈத்துத்**
**(புறநானூறு. 362)**

பார்ப்பனருக்குத் தானம் செய்ததால் புரவலர் எமனுக்குப் பயப்படவில்லை என்பது பார்ப்பனரின் சமூக மேலாதிக்கத்தினை வலியுறுத்துகின்றது. பார்ப்பனருக்குத் தானம் வழங்க வேண்டியது அவசியம் என்ற விதி இப்பாடல் தரும் தகவலாகும். சமூக அடுக்கில் பார்ப்பனர் உச்சநிலை வகிப்பது நுட்பமாக வெளிப்பட்டுள்ளது.

இரண்டாயிரமாண்டுகளாக வைதிக சமயம், விதிகள் என்ற பெயரில் தமிழர் வாழ்க்கையில் ஆழமாக ஊடுருவியுள்ளது. இனக்குழு வாழ்க்கை சிதைவடைந்து கொண்டிருந்த சங்க காலகட்டத்திலே வைதிக சமயம், நால் வருணப் பாகுபாட்டின் அடிப்படையில் மேல்-கீழ் வேறுபாடுகளை அறிமுகப்படுத்தியது. சங்க இலக்கியத்திலும், தொல்காப்பியத்திலும் இடம் பெற்றுள்ள வேள்வி முதலான செய்திகள்தற்செயலானவை அல்ல. வருணக் கலப்புக் கூடவே கூடாது என்பதை விதி அல்லது தருமத்தின்பேரில் வலியுறுத்தும் வைதிக சமயம் தூய்மை, தீட்டு, விலக்கு போன்றவற்றையும் முன்னிலைப்படுத்துகின்றது. எந்தவொரு சூழலிலும் தன்னை மேன்மையான இடத்தில் வைத்துக் கொள்ள முயலும் பார்ப்பனியம், புரோகிதம் என்ற பெயரில் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகள், பரிகாரச்சடங்குகள் மூலம் பல்வேறு விதிகளை விதித்துள்ளது.

நோயினால் மாண்ட மன்னனின் உடலைத் தருப்பைப்புல்லின்மீது கிடத்திய நான்கு வேதங்களை ஓதிடும் பார்ப்பனர், அந்த உடலை வாளினால் வெட்டி, போரில் இறந்த மன்னர்கள் உலகிற்குச் செல்க எனப் பரிகாரம் செய்த முறையினைப் புறநானூற்றுப் பாடல் அறிய முடிகின்றது. வீரம் முதன்மையாகக் கருதப்பட்ட சங்க காலத்திலே பரிகாரம் என்ற பெயரில் வைதிக சமயம், புதிய விதியினை ஆளுவோரிடையிலும் அமல்படுத்தி விட்டது. யாராவது இறந்தால் கருமாதி என்ற பெயரில் பார்ப்பனர் செய்யும் வைதிகச் சடங்கு இன்றும் தொடர்கின்றது. குழந்தை பிறந்தது முதலாக ஒவ்வொரு கால கட்டத்திலும் வருவாய் பெறுவதற்கான வளமான ஏற்பாட்டினுக்கு வைதிக விதிகள் பெரிதும் பயன்படுகின்றன. விதி அல்லது விலக்கு என்ற பெயரில் கடவுள் அல்லது கோவிலை முன்வைத்துப் பார்ப்பனர் நடத்தும் சடங்குகள் இன்றளவும் தொடர்வது ஒருவகையில் அபத்தம்.

இலக்கண நூலான தொல்காப்பியம், மொழிக்கு மட்டுமின்றி அன்றைய சமூகச்சூழலில் நிலவிய விதிகளையும் பதிவாக்கியுள்ளது. ஐந்திணைக் கோட்பாடு, அகம், புறம், வீரம், கொடை, காதல் பற்றிய வரையறைகள் முக்கியமானவை. சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார் எனக் காதலர்களின் பெயர்களைக் குறிப்பிடாதிருத்தல்

என்ற அகப்பாடலுக்கான விதி நுட்பமானது. போரில் வீரமரணம், புறமுதுகிட்டு ஓடாதிருத்தல் எனப் புறப்பாடல்களும் விதிகளை வகுத்துள்ளன.

"எண்ணரும் பாசறை பெண்ணோடு புணரார்" என்ற தொல்காப்பிய வரி போர்க்களத்தில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான உறவினை விதியாக மாற்றுகின்றது. பொருள் தேடிச் செல்லுதல் ஆணின் இலக்கணம் என்ற நிலையில் வீட்டில் குழந்தைகளுடன் காத்திருத்தல் பெண்ணின் இலக்கணமாகும். பெண்ணின் புழங்குவெளி வரையறுக்கப்பட்ட சூழல் விதிகளின் அடிப்படையிலானது. முந்நீர் வழக்கம் மகடூஉ வொடு இல்லை என்ற என்ற விதி பெண் கடல் கடந்து செல்லக்கூடாது எனத் தடை விதிக்கின்றது பெண் குறித்த இத்தகைய விலக்குகள் வைதிக சமய நெறியினை வலியுறுத்தும் மனு தருமத்திலும் இடம் பெற்றுள்ளன.

தாய் வழிச் சமூகம் சிதைவடைந்து உருவான சமூக அமைப்பு நிலவிய சங்ககாலத்தில் அகத்திணை இலக்கணம்மூலம் பெண்ணின் உடலும் மனமும் பற்றிய புதிய விதிகள் உருவாக்கப்பட்டன.

**தண்ணுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்**
**எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை**

என்ற தொல்காப்பிய வரிகள் பெண் பற்றிய புதிய பிம்பத்தினைக் கட்டமைக்க முயலுகின்றன. தனது பாலியல் விழைவினைப் பெண்தனதுகாதலனிடம் சொல்வதுகூடாது என்பது ஆண் பெண் உறவில் சமமற்ற நிலையை வலியுறுத்துவதாகும். பாலியல் விதிகளை உருவாக்க வேண்டிய நிலை தொல்காப்பியருக்கு ஏற்பட்டது ஆய்விற்குரியது.

குடும்பம் என்ற அமைப்பின் உருவாக்கத்தில் பெண்ணின் செயல்பாடுகள் குறித்த விதிகளைத் தொல்காப்பியம் பதிவாக்கியுள்ளது. மனைவி என்ற நிலையில் அவள் எப்படி இருக்க வேண்டுமென்ற விதி நுண்ணரசியல் சார்ந்தது.

**தற்புகழ் கிளவி கிழவன் முன் கிளத்தல்**
**எத்திறத்தானும் கிழத்திக்கு இல்லை**

மனைவி தனது கணவன் முன்னால் தனது உறவினரின் பெருமைகள், தனது சிறப்புகள் குறித்துப் பேசுவது கூடவே கூடாது என்ற விதி ஆண் மேலாதிக்க அரசியலின் வெளிப்பாடாகும்.

பெண்ணின் இயற்கையான பாலியல் வேட்கை, செயல்பாடுகள் குறித்துத் தொல்காப்பியம் முன் வைக்கும் விதிகள் ஆய்விற்குரியன.

**உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்**
**செய்தீர்க் காட்சி கற்பு சிறந்தன்று எனத்**
**தொல்லோர்க் கிளவி புல்லிய நெஞ்சமொடு**

உயிர், நாணம், கற்பு என அடுத்தடுத்துப் பெண்ணின் அடிப்படையாகத் தொல்காப்பியர் வகுக்கும் விதிகள் பெண்ணின் யோனித் தூய்மையை வலியுறுத்துகின்றன.

ஆண் பற்றிப், "பெருமையும் உரனும் ஆடுஉமேன" பெருமையாகக் குறிப்பிடும் தொல்காப்பியர் பெண்ணைப் பற்றிக் குணரீதியில் விதிகளை வகுத்துள்ளார்.

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரியன என்ப**

சங்கப் பெண்ணிலிருந்து மாறுபட்டுப் புதிய வகையில் அச்சம், மடம். நாணம் போன்றவற்றைப் பெண்ணுக்கான விதிகளாக்குவதற்கான காரணம் ஆய்விற்குரியது. தாய் வழிச் சமூகத்தின் எச்சங்கள் நிலவிய சங்ககாலத்தில், வேந்தனின் உடைமைச் சமூகத்தின் நலனுக்கான உடல்களை உருவாக்கிடத் தொல்காப்பியர் புதிய அறங்களை வகுத்துள்ளார். இயற்கையான பால் வேறுபாட்டினுக்கு மாற்றாகப் பண்பாட்டுப் பால் வேறுபாடு முன்னிலைப்படுத்துவதில் அரசியல் பொதிந்துள்ளது. ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனியாகச் சொல்லப்பட்ட அறங்கள் பாலியல் அடிப்படையிலானவை. ஆணின் உடைமையாக நிலம் மாற்றப்பட்ட போது, பெண்ணும் ஆணின் உடைமையாக

மாற்றப்பட்டாள். அன்றைய சமூகப் பொருளாதார அரசியல் நிலைமைகள், பாலியல் அரசியலுடன் இணைந்து பெண் பற்றிய புதிய விதிகளை வகுத்தன. சொத்துடைமை சமூகத்தில் பெண்ணின் நிலை இரண்டாமிடம் பெற்றதை விதிகளாக்கித் தொல்காப்பியர் பதிவாக்கியுள்ளார். அவை பெண் பற்றிய மதிப்பீட்டில் இன்றளவும் தமிழகத்தில் ஆளுகை செலுத்துகின்றன.

தொல்காப்பியம் வகுத்துள்ள பெண் பற்றிய விதிகள் சங்க இலக்கியப் படைப்புகளில் பெரிதும் இடம் பெறவில்லை. பெண்ணைச் சமூகமயமாக்கலின் விதிகள் தொல்காப்பியரின் காலத்தில் மேலாதிக்கம் பெற்றமைக்குக் காரணம் வைதிக சமயம் வலுப் பெற்று விட்டது என்றுதான் கருத வேண்டியுள்ளது.

சங்க இலக்கியம் சித்திரிக்கும் போர், வேட்டை, இறைச்சி உண்ணுதல். மது அருந்துதல் காமக் கொண்டாட்டம் என்ற நிலையானது பெரிதும் இனக்குழு வாழ்க்கை சார்ந்தது. அன்றைய சூழலில் புலன்களின் மூலம் பெறப்படும் இன்பங்களைத் துய்ப்பது இயல்பானதாகக் கருதப்பட்டது. விண்ணுலகில் இருப்பதாக மதங்கள் புனையும் சொர்க்கம் பற்றிச் சங்கத் தமிழர் அக்கறை கொண்டிருக்கவில்லை. இத்தகைய சுழலில் பௌத்தமும் ஜைனமும் கருத்தியல்ரீதியில் தமிழரிடையே மெல்லப் பரவத் தொடங்கின. அவை துறவு வாழ்க்கைக்கு முக்கியத்துவம் தந்தன. பௌத்த துறவியர் போதித்த எண்வகை நெறிகள் குறிப்பிடத்தக்கன. கொல்லாமை, களவு செய்யாதிருத்தல், காமம் இன்மை, பொய் சொல்லாதிருத்தல், கள்ளுண்ணாதிருத்தல் போன்றவை வலியுறுத்தப்பட்டன.

ஜைன அறம் வினையின் விளைவானது பிறவி என்ற கருத்தின் அடிப்படையில் ஐம்புலன்களையும் அடக்குவதற்கு முன்னுரிமை தந்தது. உயிரினங்களைக் கொல்லுவது கூடவே கூடாது என்பது ஜைனர்களின் கருத்து. ஆசையைத் துறத்தலை வலியுறுத்தும் ஜைன மதம், பூமியில் விரதங்கள் என்ற பெயரில் மனித உடல்களை வதை செய்வதற்கு முன்னுரிமை தந்தது. அணு விரதம் எனப்படும் கொல்லாமை, பொய் சொல்லாமை, திருடாமை, காமம் இல்லாதிருத்தல் போன்றவை ஜைன நெறியில் முக்கியமானவை. பௌத்தமும் ஜைனமும் போதிக்கும் விதிகள் துறவிகளுக்கானவை என்ற நிலையில் சங்கத் தமிழர் அவற்றை எங்ஙனம் எதிர் கொண்டனர் என்பது முக்கியமான கேள்வி.

ஜைனமும் பௌத்தமும் கருத்தியல் ரீதியில் மக்கள் வாழ வேண்டிய நெறிகள் குறித்து விதிகளை வகுத்துள்ளன. மறு உற்பத்திக்கு அடிப்படையானதும் உடல்களில் இயல்பாகப் பொங்கிடுகின்ற காம உணர்வினை விலக்க வேண்டுமென்ற விதியைப் பண்டைத் தமிழர்கள் பின்பற்றவில்லை. கொல்லாமை, புலால் மறுத்தல், மது குடிக்காதிருத்தல் பற்றிய விலக்குகளைச் சங்கத் தமிழர் பெரிதும் அக்கறை கொள்ளவில்லை. சங்கப்பாடல்களில் ஜைனத்தின் முதன்மைக் கோட்பாடான அகிம்சை பற்றிப் பதிவு எதுவுமில்லை. என்றாலும் மத அடிப்படையில் விதிகளும் விலக்குகளும் புகுத்தப்பட்டதைச் சங்க இலக்கியப் பிரதிகள் மூலம் அறிய முடிகின்றது. மகாவீரர் ஜைனத் துறவியருக்குப் போதித்த ஐந்து முக்கியமான விதிகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. நீத்தார் பெருமை, கூடா ஒழுக்கம், கள்ளாமை, புலால் மறுத்தல், தவம், அருளுடைமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை, வாய்மை முதலான அதிகாரங்களில் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள விதிகள் ஜைன சமயக் கருத்துகளின் அடிப்படையிலானவை.

கள்ளும் நஞ்சும் ஒன்று எனச் சொல்லும் திருவள்ளுவர், கள் குடிப்பது ஆணின் அறம் அல்ல விலக்கினை அறிமுகப்படுத்தியுள்ளார். மனு தரும சாஸ்திரம் உள்பட்ட ஜைன,

பௌத்த சமய நூல்களிலும் கள் குடித்தலை விலக்குவதுடன் பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

புலன் அடக்கத்தில் ஒன்றாக நாக்கினைக் கட்டுப்படுத்த வேண்டும் எனத் திருவள்ளுவர் சொல்வதில் மறுபக்கம் கவனத்திற்குரியது. யாகாவராயினும் நாவினை அதாவது பேசும் பேச்சினில் கவனத்துடன் இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப் படுகின்றது. அவை அறிதல் அவை அஞ்சுதல் ஆகிய இரு அதிகாரங்களில் ஏற்றத்தாழ்வான சமூகத்தில் ஆள்வோர்/ அறிஞர் முன்னால் எப்படிப் பேச வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்ந்தவர் பயனற்றச் சொல்லைச் சொல்ல மாட்டார் என்ற கருத்து அதிகாரத்தின் குரலாகும். இனக்குழுத்தலைவன் தன்னை நாடி வந்த பாணருடன் அளவளாவி கள்ளும் இறைச்சியும் உண்டு பேதமற்றுப் பேசிக் களித்த சங்ககாலச் சூழல் பெரிதும் மாறி விட்ட நிலையினைத் திருக்குறள் சித்திரித்துள்ளது. அரசியலில் மதங்கள் கலந்துவிட்ட சூழலில், அதிகாரத்தினுக்குப் பணிதல் அவசியம் என்ற விதி நுட்பமாகப் புகுத்தப்பட்டுள்ளது

"தம் நிறை தாம் காத்தலே மகளிர் கடமை. நல்ல காவல் அதுவே. வீட்டுக்குள் பூட்டிக் காவலிடுவது பயனற்ற செயல்" எனப் பெண்ணின் இயல்பாக மனு தரும சாஸ்திரம் குறிப்பிடுகின்றது. சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்/ நிறைகாக்கும் காப்பே தலை என்ற திருக்குறளின் கருத்தும் மனுவின் கருத்தும் ஒத்துப் போவது பெண் பற்றிய சமூக விதியின் வெளிப்பாடாகும்.

திருக்குறளில் பிறன் இல் விழையாமை என்ற அதிகாரத்தின் தலைப்பு, பெண் ஒருவனைத் திருமணம் செய்து கொண்டால் அவனுடைய உடைமைப் பொருளாக மாறி விடுகின்றாள் என்பதை உணர்த்துகின்றது. பாலியல் அறத்தைப் பொறுத்தவரையிலும் மனைவியின் உலகம் முழுக்கக் கணவனைச் சார்ந்தது. இயல்பான சங்கப் பெண்ணிலிருந்து விலகிப் பத்தினி அல்லது பதிவிரதை என்ற மையத்தை நோக்குவதாகப் பெண்ணின் பிம்பத்தைத் திருக்குறள் புதிய விதிகளின் மூலம் கட்டமைத்துள்ளது. பெண்ணின் பேச்சைக் கேட்காதே என ஆணுக்குத் திருவள்ளுவர் சொல்வது அறிவுரை அல்ல, விதியாகும். மகளிர் தம்முடைய நிறை அல்லது கற்பினைக் காத்தல் கடமை என விதிக்கும் திருவள்ளுவர் ஆணின் கடமையென விதிகள் எதுவும் வகுக்கவில்லை.

தமிழரின் அடையாளமாகச் சிறப்பிக்கப் படும் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற புறநானூற்றுப் பாடலில் இடம் பெற்றுள்ள "தீதும் நன்றும் பிறர் தர வாரா", நீர் வழிப்படும் புனை போல போன்ற வரிகள், ஜைன சமயம் வகுத்துள்ள விதிகளின் அடிப்படையிலானவை. குடி, மன்பதை எனப் பாரம்பரியமாக இனக்குழுப் பெருமையுடன் குறிப்பிட்ட பிராந்தியத்தில் வாழ்ந்து வந்த பூர்விகக் குடியினரை அகற்றி, வேந்தரின் ஆட்சிப் பரவலை ஏற்றுக்கொள்ளச் செய்வது கணியன் பூங்குன்றனாரின் நோக்கமாக உள்ளது. பழங்குடியினரின் அகமணமுறைகளும் குடிப்பெருமையையும் பண்பாட்டு ரீதியில் எதிர்கொள்ள "ஊழ்வினை" பயன்பட்டுள்ளது. ஜைனரின் வினைக்கோட்பாட்டின் அடிப்படையில் புற உலகின் அரசியலை விளங்கிட உதவும் இப்பாடல், இன்றளவும் தேசிய இனங்களின் தனித்துவத்தினை அழித்து ஒற்றை அரசியல் அதிகாரத்தினை நிறுவிட முயலுகின்றவர்களுக்குப் பயன் படுகின்றது.

தமிழுக்குப் பெருமை அற இலக்கியம் எனப் பெருமை பேசும் குரல்கள் மேலோட்டமானவை. சங்க காலத்தில் களியும் கூத்தும் அளவுக்கு அதிகமானதால், நீதிகளைப் போதிப்பதற்காகத் திருக்குறள் முதலான நீதி நூல்கள் இயற்றப்பட்டன என்ற வாதம், அபத்தமானது, அடிப்படையற்றது.

சங்க காலத்தில் நிலவிய வாழ்க்கை முறையைச் சிதைத்துப் புதிய வகைப்பட்ட அரசியல் அமைப்பினை ஏற்படுத்தும்போது, மாறும் இருப்பினை மக்களிடையே நியாயப்படுத்தும் விதிகளை நீதி நூல்கள் வகுத்தன. வைதிக சமயமும், அவைதிக சமயங்களான பௌத்தமும், ஜைனமும் கருத்தியில்ரீதியில் தமிழகத்தில் வலுவடைய அறிமுகப்படுத்திய விதிகளும் விலக்கு களும்தான் நீதி நூல்கள் தோறுவதற்கான பின்புலம். இறுதியாக மனு தருமம் நூலில் இருந்து ஒரு ஸ்லோகம்: “தண்டனைக்குப் பயந்துதான் உலகம் நடக்கிறது. தண்டனை இன்றேல் யாரும் நல்வழியில் நடவார். தண்டனையே ஆண்மையுடைய நீதி. அதுவே நால்வகை ஒழுக்கத்திற்கும் அரண். தண்டனையினால் அரசன் தகுதி உயர்கின்றது. அது அனைத்துயிர்களையும் தண்டித்துக் காக்கிறது. அதுவே ஒன்றை விதிக்கவும் அடக்கவும் வல்லது.”

**சான்றாதாரம்**

1. மநு தர்மம், தமிழ்நாடன் (மொ-பெ). சென்னை: காவ்யா பதிப்பகம், 2011.
2. ராஜ் கௌதமன். தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும். கோவை: விடியல் பதிப்பகம், 2008.